# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 236/2024**

**Deposition of LW2 examined as PW2** Dt. 02.02.2026

| | |
|---|---|
| Name | ஷீலா |
| Husband's Name | கல்யாணசுந்தரம் |
| Village | T. மணல்மேடு |
| Taluk | |
| Age | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 02.02.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

சாட்சி மனுவின் பேரில் குறுக்கு விசாரணை செய்தவற்காக மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில்

**குறுக்கு விசாரணை**

எதிரிக்கும் எனக்கும் திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 16 ஆண்டுகள் ஆகிறது. எங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு ஆண் குழந்தை ஒரு பெண் குழந்தை. எனது மகன் 10–ம் வகுப்பு பயின்று வருகிறார் மகள் 11–ஆம் வகுப்பு பயின்று வருகிறார். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், தற்சமயம் வீட்டில் தான் இருந்து வருகிறேன் வேலைக்கு செல்லவில்லை. இதற்கு முன்பு என்ன வேலை செய்து வந்தேன் என்றால் ஸ்வீட் & Hotel கடையில் பணிபுரிந்து வந்தேன்.பொதுவாக எனது கணவர் நான் வேலைக்கு செல்வதை விரும்ப மாட்டார் என்றால் சரிதான். மாமனார் மாமியார் உயிருடன் உள்ளனரா என்றால் மாமனார் உயிருடன் உள்ளார் மாமியார் இறந்துவிட்டார். எனது கணவருடன் கோபித்துக் கொண்டு நான் ஊருக்கு செல்லும் போதெல்லாம் என் மாமனாருக்கு யார் சாப்பாடு கொடுப்பார் என்றால் அவரே சமைத்துக் கொள்வார். எனது மாமனாருக்கு வயது என்னவென்றால் சுமார் 63 இருக்கும். இந்த வழக்கு சண்டைக்கு ஒரு ஆண்டிற்கு முன்னர் தான் எனது மாமியார் இறந்து போனார். நடந்ததாக கூறப்படும் சம்பவத்திற்கு பிறகு எவ்வளவு நேரம் கழித்து எனது தம்பி வந்தார் என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் எனது அப்பா எங்கு இருந்தார் என்றால் எனது வீட்டில் தான் இருந்தார். எங்கள் தெரு தார் சாலையா, மண் சாலையா என்றால் தார் சாலை தான். என் கணவருக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் தடுமாறி நான் தார் சாலையில் விழுந்து தான் எனக்கு தலையில் காயம்

ஏற்பட்டது என்றாலும், எதிரி தாக்கியதில் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. என் கணவரை பலி வாங்க வேண்டும் என்ற நோக்கில் அவர் மீது அளிக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் போய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முன்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2.12.26.